File No: 1010/2 June 6, 2026

**BSE Limited**
**P J Tower, Dalal Street,**
**Fort Mumbai-400001**
**Scrip Code: 542216**

**National Stock Exchange of India Limited**
**"Exchange Plaza", C-1, Block G**
**Bandra – Kurla Complex, Bandra (E),**
**Mumbai – 400 051**
**Symbol: DALBHARAT**

**Sub: Submission of Newspaper Advertisement related to 13th Annual General Meeting, Record Date, e-voting and other related information**

Dear Sir/Madam,

Pursuant to Regulation 30 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, we submit herewith copies of Newspaper advertisement related to Record Date, E-voting and other related information in respect of the 13th Annual General Meeting of the Company scheduled to be held on Tuesday, June 30, 2026 at 11:30 A.M.(IST) through Video Conferencing (VC) / Other Audio Visual Means (OAVM), published on June 6, 2026 in newspapers viz. Financial Express (English-all editions- National) and Dinamani (Tamil-all editions).

Kindly take the same on your record.

Thanking you,

Yours sincerely,
**For Dalmia Bharat Limited**

Rajeev kumar
Digitally signed by Rajeev kumar
Date: 2026.06.06 11:21:06 +05'30'

**Rajeev Kumar**
**Company Secretary**

Encl.: As above




# Dalmia Bharat Limited

Dalmia Bharat LIMITED

Registered Office: Dalmiapuram, Lalgudi, Dist. Tiruchirappalli, Tamil Nadu – 621651
Corp Off.: 11th & 12th Floor, Hansalaya Building,
15, Barakhamba Road, New Delhi-110001
Phone No.: 04329-235132; Fax No.: 04329-235111; CIN: L14200TN2013PLC112346
E-mail: corp.sec@dalmiabharat.com; Website: www.dalmiabharat.com

## NOTICE OF 13th ANNUAL GENERAL MEETING AND E-VOTING INFORMATION

Notice is hereby given that the 13th Annual General Meeting **("AGM")** of the Company will be held on Tuesday, June 30, 2026 at 11:30 A.M. (IST) through Video Conference **("VC")** or other Audio Video Means **("OAVM")**, in compliance with the applicable provisions of the Companies Act, 2013 and rules framed thereunder and the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 (hereafter referred to as the **"Listing Regulations"**) read with General Circular No. 03/2025 dated September 22, 2025 and the circulars issued earlier in this regard by the Ministry of Corporate Affairs (Collectively referred to as **"MCA Circulars"**), to transact the business set out in the Notice of 13th AGM without the physical presence of the Members at the common venue. The Notice of 13th AGM and the Integrated Annual Report of the Company for the financial year 2025-26 has been sent electronically to all those members of the Company whose e-mail addresses are registered with the Company/Depository Participant(s)/ KFin Technologies Limited **("RTA")**.

Further, pursuant to Clause 36(1)(b) of the Listing Regulations, a letter has been sent to all those shareholders whose email ids are not registered with the Company or RTA or their depository participants, providing the weblink where the Notice of 13th AGM and the Annual Report of the Company for the Financial Year 2025-26 is hosted.

Physical copies of the Annual Report for the Financial Year 2025-26 will be sent only to those Members who specifically request for the same. The Members of the Company can join and participate in the AGM through VC or OAVM facility only.

Pursuant to Section 108 of the Act read with Rule 20 of the Companies (Management and Administration) Rules, 2014, Regulation 44 of the Listing Regulations and Secretarial Standard-2, the Company is providing the facility to cast vote by electronic mode through Company's RTA on all the resolutions set out in the Notice of AGM in terms of Section 108 of the Companies Act, 2013, read with rules made thereunder. The details of the facility are given hereunder:

1. Date of completion of electronic dispatch of the AGM Notice & Annual Report for the FY 2025-26: June 4, 2026.
2. Date and time of commencement of remote e-voting: Friday, June 26, 2026 at 09:00 a.m. (IST).
3. Date and time of end of remote e-voting: Monday, June 29, 2026 at 05:00 p.m. (IST).
4. The Cut-off date as on which the voting of shareholders shall be reckoned: Tuesday, June 23, 2026. In case a person becomes a Shareholder of the Company after the dispatch of AGM Notice but on or before the cut-off date, i.e., Tuesday, June 23, 2026, the Shareholder may obtain the login ID and Password by sending a request to evoting@nsdl.com or to the Company at corp.sec@dalmiabharat.com. However, if he/ she is already registered with NSDL for remote e-Voting then he /she can use his/ her existing User ID and password for casting the vote.
5. Remote e-voting by electronic mode shall not be allowed beyond 05:00 p.m. (IST) on Monday, June 29, 2026.
6. Shareholders who would cast their vote through the remote e-voting facility, shall not be allowed to vote again during the AGM. Only the Shareholders whose names are recorded as on the Cut-off date in the Register of Members or in the list of beneficial holders provided by Depositories are entitled to avail the facility of remote e-voting or voting during the AGM.
7. Shareholder who would have casted their vote once on a resolution, shall not be allowed to cast their vote again or change it subsequently. The detailed instructions relating to remote e-voting and e-voting during the AGM and for participation in the AGM are provided in the Notes forming part of the AGM Notice.
8. Shareholders holding shares in demat mode whose e-mail addresses are not registered may get their e-mail address registered with their respective Depository Participant(s), and Shareholders holdings shares in physical mode are requested to update their E-mail addresses with Company's RTA i.e. KFin Technologies Limited, through https://kprism.kfintech.com/signup or by writing to einward.ris@kfintech.com.
9. The Notice of the AGM, including the procedure for remote e-voting, is also available on the website of the Company at www.dalmiabharat.com and on the website of the NSDL at https://www.evoting.nsdl.com.
10. The Company has appointed Mrs. Jyoti Sharma of M/s. JVS and Associates, Practicing Company Secretaries (Membership No. F8843, CP No. 10196), as the Scrutiniser for the remote e-voting as well as the e-voting during the AGM.

For any further queries/grievances connected with e voting, you may refer Frequently Asked Question (FAQs) and e-voting User Manual for shareholders at www.evoting.nsdl.com or contact NSDL at Tel No. 022 - 48867000 or the undersigned at 11th Floor, Hansalaya Building, 15, Barakhamba Road, New Delhi-110001, Tel: 011-23465100; Email id- corp.sec@dalmiabharat.com.

By order of the Board
For **Dalmia Bharat Limited**
**Sd/-**
**Rajeev Kumar**
**Company Secretary**
Membership No. F-5297

Place: New Delhi
Date: June 5, 2026

From the Promoters of P. N. GADGIL & SONS 1832 Gold | Silver | Diamonds

Gargi by P. N.Gadgil & Sons

# PNGS GARGI FASHION JEWELLERY LIMITED

CIN: - L36100PN2009PLC133691
Registered Office : Plot No.8A ,Sr No.37/1 and 37/2, Opposite Maruti Service Centre,
Sinhgad Road, Wadgaon Khurd, Nanded, Pune, Haveli, Maharashtra, India, 411041
Website : www.gargibypng.com | Email-Id: investor@gargibypng.com

## NOTICE OF ANNUAL GENERAL MEETING

NOTICE is hereby given that the Seventeenth (17th) Annual General Meeting ("AGM") of the Members of PNGS Gargi Fashion Jewellery Limited ("the Company") will be held on Saturday, June 27, 2026 at 12:00 PM (IST) through Video Conferencing ("VC") /Other Audio-Visual Means ("OAVM") to transact the business as set out in the Notice of AGM dated May 06, 2026 in compliance with the applicable provisions of the Companies Act, 2013, and rules made thereunder and the Securities and Exchange Board of India (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 ("SEBI Listing Regulations"), read with applicable circulars on the matter issued by Ministry of Corporate Affairs (MCA) and Securities Exchange Board of India (SEBI). Electronic copies of the notice of the AGM which inter-alia includes procedure and instructions for e-voting and the Annual Report for the financial year 2025-26 has been sent on June 05, 2026 to the Members whose e-mail IDs are registered with the Company/RTA or the Depositories. The Company shall send a physical copy of the Annual Report to those Members who request for the same at investor@gargibypng.com mentioning their Folio no./DP ID and Client ID.

The Notice and the Annual Report for the financial year 2025-26 is available on the following links:

| Company Website: | |
|---|---|
| a) Notice of AGM | Link: https://www.gargibypng.com/agm-egm/-<br>Path: https://www.gargibypng.com> Investor> AGM/EGM> AGM Notice 2025-26 |
| b) Annual Report for the financial year 2025-26 | Link: https://www.gargibypng.com/annual-report/<br>Path: https://www.gargibypng.com> Investor> Annual Report> Annual Report for the F.Y. 2025-26 |
| National Securities Depository Limited (NSDL) | https://www.evoting.nsdl.com |
| BSE Limited | www.bseindia.com |

**Manner of casting votes electronically:**
Pursuant to the provisions of the Section 108 of the Companies Act, 2013 read with Rule 20 of the Companies (Management and Administration) Rules, 2014, as amended from time to time and Regulation 44 of the SEBI Listing Regulations, the Members are provided with the facility to cast their votes on all resolutions set forth in the AGM Notice using electronic voting through remote e-voting system.

**Scrutinizer:**
CS Ruchi Bhave, Practicing Company Secretary (FCS: 13324, CP: 27019) and failing her, Mr. Jayavant B. Bhave, Practicing Company Secretary (FCS: 4266, CP: 3068) and proprietor of M/s J B Bhave & Co., Company Secretaries has been appointed as the Scrutinizer to scrutinize the e-voting process in a fair and transparent manner.

**Cut-off date:**
The voting rights of Members shall be in proportion to the equity shares held by them in the paid-up equity share capital of the Company as on the cut-off date i.e., Friday, June 19, 2026.

**Details of e-voting period:**

| | |
|---|---|
| Start date and time | From 9.00 a.m. (IST) on June 23, 2026 |
| End date and time | Upto 5.00 p.m. (IST) on June 26, 2026 |

During the aforesaid period, Members holding equity shares of the Company, either in physical form or in dematerialized form, as on cut-off date, may cast their vote electronically. The remote e-voting module shall be disabled by NSDL e-voting thereafter. Those Members, who have not cast their vote on the Resolutions through remote e-voting and are otherwise not barred from doing so, shall be eligible to vote through e-voting system of NSDL made available by the Company during the AGM. The Members who have cast their votes by remote e-voting prior to the AGM are requested to also attend/participate in the AGM through VC/OAVM but shall not be entitled to cast their vote again. Once the vote on a resolution is cast by the Member, the Member shall not be allowed to change it subsequently.

Any person, who acquires shares of the Company and becomes a Member of the Company after the Notice has been sent electronically by the Company and holds shares as of the cut-off date, may obtain the login ID and password by sending a request to evoting@nsdl.co.in. However, if the Member is already registered with NSDL for remote e-voting then he/she can use his/her existing Login ID and password for casting the votes.

In case of any queries, Members may refer the Frequently Asked Questions (FAQs) for Shareholders and e-voting user manual for Shareholders available at the download section of www.evoting.nsdl.com or call on: 022-48867000 or send a request to Ms. Pallavi Mhatre at evoting@nsdl.com.

Date: June 05, 2026
Place: Pune

For PNGS Gargi Fashion Jewellery Limited
Sd/-
Hiranyamai Deshpande
Company Secretary & Compliance Officer
ACS- 48576

## வாழ்த்து...



சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஜோசப் விஜய்யை சந்தித்து வாழ்த்து பெற்ற புதிதாக காவல் துறை தலைமை இயக்குநர் (சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்) பொறுப்பேற்றுள்ள சந்தீப் ராய் ரத்தோர்.

# பள்ளிக் கல்வித் துறையில் புதிய பதவிகள் உருவாக்கம்: சிறப்புத் தகுதிகள் நிர்ணயம்

**சென்னை, ஜூன் 5:** பள்ளிக் கல்வித் துறையில் புரோகிராமர், உடற்கல்வி விரிவுரையாளர், கான்சோல் ஆபரேட்டர் மற்றும் மெஷின் சூப்பர்வைசர் ஆகிய புதிய பதவிகள் உருவாக்கப்படுகின்றன.

அந்தப் பதவிகளுக்கு சிறப்புக் கல்வித் தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பள்ளிக் கல்வித் துறையின் செயலர் ப.சந்தர மோகன் வெளியிட்ட அரசாணையில் கூறப்பட்டிருப்பதாவது:

பள்ளிக் கல்வித் துறையின் கீழ் வரும் அரசு தேர்வுத் துறையில் புரோகிராமர் என்ற பதவி நேரடி நியமன முறையில் நிரப்பப்படுகிறது. இந்த பதவிக்கு எம்எஸ்சி கம்ப்யூட்டர் சயின்ஸ் அல்லது எம்எஸ்சி இன்ஃபர்மேஷன் டெக்னாலஜி அல்லது எம்சிஏ கல்வித் தகுதியாக நிர்ணயிக்கப்படுகிறது. அதோடு டேட்டா ஸ்ட்ரக்சர், அல்காரிதம்ஸ், டேட்டாபேசஸ், சாஃப்ட்வேர் டெவலப்மென்ட் உள்ளிட்ட துறைகளில் குறைந்தபட்சம் 4 ஆண்டு கால பணி அனுபவம் அவசியம்.

அதேபோல், தமிழ்நாடு பொது சார்நிலை பணியின் கீழ் கான்சோல் ஆபரேட்டர் மற்றும் மெஷின் சூப்பர்வைசர் என்ற புதிய நேரடி நியமன பதவி உருவாக்கப்படுகிறது. இதற்கு கல்வித் தகுதியாக பிஎஸ்சி கம்ப்யூட்டர் சயின்ஸ் அல்லது பிஎஸ்சி இன்ஃபர்மேஷன் டெக்னாலஜி அல்லது பிசிஏ பட்டப் படிப்பு நிர்ணயிக்கப்படுகிறது.

அத்துடன் டேட்டா ஸ்ட்ரக்சர், அல்காரிதம்ஸ், டேட்டாபேசஸ், சாஃப்ட்வேர் டெவலப்மென்ட் டிசைனிங், டிபக்கிங் உள்ளிட்ட துறைகளில் குறைந்தபட்சம் 4 ஆண்டு கால பணி அனுபவம் வேண்டும்.

மேலும், தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி பணியில் உடற்கல்வி பாடத்தில் புதிதாக விரிவுரையாளர் பதவி உருவாக்கப்படுகிறது. இந்தப் பதவிக்கு முதுநிலைப் பட்டத்துடன் எம்பிஎட் பட்டம் பெற்றிருக்க வேண்டும் என அதில் கூறப்பட்டுள்ளது.

# நீலகிரி வரையாடுகளின் எண்ணிக்கை 4.68% உயர்வு: வனத் துறை

**சென்னை, ஜூன் 5:** தமிழகத்தின் மாநில விலங்கான நீலகிரி வரையாடுகளின் எண்ணிக்கை நிகழாண்டில் 4.68 சதவீதம் (1,364) உயர்ந்துள்ளதாக தமிழக வனத் துறை தெரிவித்துள்ளது.

சென்னை கிண்டியில் உள்ள சிறுவர் பூங்காவில் தமிழக சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற உலக சுற்றுச்சூழல் தின விழாவில் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்ற வனத் துறை அமைச்சர் ஆர்.வீ.ரஞ்சித்குமார், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் வி.கே.ராஜீவ் ஆகியோர் பங்கேற்று 'கடந்த ஆண்டுக்கான (2025-26) தமிழ்நாடு ஒருங்கிணைந்த பறவைகள் கணக்கெடுப்பு', 'மாநில அளவிலான வேட்டை பறவைகள் கணக்கெடுப்பு', 'நீலகிரி வரையாடு எண்ணிக்கையை மதிப்பிடுவதற்கான மூன்றாவது ஒருங்கிணைந்த கணக்கெடுப்பு' ஆகிய கணக்கெடுப்புகளின் தரவுகளை வெளியிட்டனர்.



சென்னை கிண்டி சிறுவர் பூங்காவில் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் நடைபெற்ற 'உலக சுற்றுச்சூழல் தின' விழாவில் 'தமிழகத்தில் பவளப்பாறை மறுசீரமைப்பு: களப்பணியாளர்களுக்கான நிலையான செயல்முறை வழிகாட்டுதல்கள்' அடங்கிய புத்தகத்தை வெளியிட்ட வனத் துறை அமைச்சர் ஆர். வீ. ரஞ்சித்குமார், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் வி.கே.ராஜீவ் உள்ளிட்டோர்.

**4.68 சதவீதம் உயர்வு:** இந்த தரவுகளின் படி, மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் நிகழாண்டு மேற்கொள்ளப்பட்ட நீலகிரி வரையாடு இன எண்ணிக்கையை மதிப்பிடுவதற்கான ஒருங்கிணைந்த கணக்கெடுப்பில் மொத்த எண்ணிக்கை 1,364 என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, கடந்த ஆண்டை விட 4.68 சதவீதம் அதிகமாகும்.

தமிழகத்தில் உள்ள மொத்த நீலகிரி வரையாடு இனத்தில் 44.87 சதவீதம் ஆனைமலைப் பகுதிகளிலும், 29.25 சதவீதம் நீலகிரி நிரப்பரப்புகளிலும் வாழ்கின்றன. இவற்றில் ஆண் - பெண் விகிதம் 55:100 எனவும், பெண் - குட்டி விகிதம் 100:66 எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுக்கான ஒருங்கிணைந்த பறவைகள் கணக்கெடுப்பில் ஈரநிலச் சூழலமைப்புகளுடன் தொடர்புடைய மொத்தம் 393 பறவை இனங்கள் பதிவு செய்யப்பட்டன.

நேரடி எண்ணிக்கையில் 6,01,348 பறவைகள் கணக்கிடப்பட்டன. இவற்றில் 116 இனங்கள் நீர்ப்பறவைகளாகவும், 131 இனங்கள் வலசைப் பறவைகளாகவும் இருந்தன. அதேபோல், நிலவாழ் பறவை கணக்கெடுப்பில் மொத்தம் 391 பறவை இனங்கள் பதிவு செய்யப்பட்டு நேரடி எண்ணிக்கையில் 2,24,801 பறவைகள் கணக்கிடப்பட்டன. இவற்றில் 228 இனங்கள் உள்ளூர் பறவைகளும், 72 இனங்கள் வலசைப் பறவைகளும் உள்ளடங்கும்.

முன்னதாக, 'தமிழகத்தில் பவளப்பாறை மறுசீரமைப்பு: களப்பணியாளர்களுக்கான நிலையான செயல்முறை வழிகாட்டுதல்கள்' எனும் நூலை அமைச்சர்கள் வெளியிட்டனர்.

நிகழ்வில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலர் சுப்ரியா சாகு, முதன்மைத் தலைமை வனப் பாதுகாவலர் ஸ்ரீனிவாஸ் ரெட்டி, முதன்மைத் தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் ராகேஷ்குமார் டோக்ரா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# ஆதம்பாக்கம் மெட்ரோ பணி: 19.5 மீ. நீள 'கர்டர்' தயாரிப்பு

**சென்னை, ஜூன் 5:** சென்னை ஆதம்பாக்கம் மெட்ரோ ரயில் பணிக்காக 19.5 மீட்டர் நீளமுள்ள பிரம்மாண்ட 'யு' வடிவிலான இரும்பு கர்டர் (கான்கிரீட் தூண்) தயாரிப்புப் பணி நிறைவடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மெட்ரோ ரயில் நிறுவனம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: சென்னை மெட்ரோ ரயில்போக்குவரத்தில் 2-ஆவது வழித்தட பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. அதில் 5 -ஆவது வழிப்பாதையானது, ஆதம்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் செல்கிறது. அப்பாதைக்கான 19.5 மீட்டர் நீளமுள்ள கான்கிரீட்டால் ஆன 'யு' வடிவ தூண் (கர்டர்) தயாரிப்புப் பணி தற்போது நிறைவடைந்துள்ளது. மெட்ரோ பணிகளில் இதுவரை தயாரிக்கப்பட்ட தூண்களில் தற்போது 19.5 மீட்டர் நீளத்தூண்தான் மிகப் பிரம்மாண்டமானது.



சென்னை மெட்ரோ ரயில் நிலையக் கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான பிரம்மாண்டமான கான்கிரீட் பாகங்களை தயாரிக்கும் இடம்.

வழித்தடம் 5 பிரிவில் 13.1 கி.மீ. நீளப்பாதை, உயர்நிலை வழித்தடமாக அமையவுள்ளது. அதற்கான தூண்கள் உள்ளிட்டவை தயாரிக்க 43 ஏக்கர் பரப்பில் பணிமனை ஏற்படுத்தப்பட்டு 6 பிரிவுகளாக பணிகள் நடைபெற்று வருகின்றன.

இரண்டாம் வழித்தடம் 5 - ஆவது பாதைக்கான பணியில் மொத்தம் 5,836 கட்டுமானப் பொருள்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

அவற்றில் 302 தூண்களின் மேல் பகுதிகள், 1465 தூண்களின் பக்கவாட்டுப் பகுதிகள், 824 'யு' வடிவ தாங்கு பாலங்கள், 2055 'ஐ' வடிவ தாங்கு பாலங்கள், 194 'டி' வடிவ தாங்கு பாலங்கள், 68 'போர்டல் யு' வடிவ அமைப்புகள் மற்றும் 1079 பாதுகாப்பு கைப்பிடிச் சுவர்களாகும்.

பிரம்மாண்ட தூண் தயாரிப்பு நிறைவுப் பணியை மெட்ரோ ரயில் திட்ட இயக்குநர் தி.அர்ச்சுனன், கூடுதல் பொது மேலாளர் சி.முரளி மனோகரன் உள்ளிட்டோர் பார்வையிட்டு பொறியாளர்கள், அலுவலர்கள், ஊழியர்களை பாராட்டினர்.

# சென்னையில் விரைவில் சிறிய ரக மின் பேருந்துகள் அறிமுகம்

**சென்னை, ஜூன் 5:** சென்னையில் பொதுப் போக்குவரத்து சேவையை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில், நகரின் குறுகிய சாலைகள் மற்றும் மெட்ரோ ரயில் நிலையங்களுடன் இணைக்கும் வகையில் சிறிய ரக மின்சாரப் பேருந்துகளை (மினி இ-பஸ்) விரைவில் அறிமுகப்படுத்த மாநகர போக்குவரத்துக் கழகம் (எம்டிசி) திட்டமிட்டுள்ளது.

இது குறித்து மாநகர் போக்குவரத்துக்கழக அதிகாரிகள் கூறியதாவது:

இந்த சிறிய ரக மின்சார பேருந்துகள் ஒரு முறை முழுமையாக மின்னேற்றம் செய்தால் சுமார் 180 முதல் 250 கி.மீ. வரை இயக்கக்கூடிய திறன் கொண்டதாக இருக்கும். மேலும், அதிவேக மின்னூட்ட வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதால் குறுகிய நேரத்திலேயே பேருந்தை மீண்டும் இயக்கத்துக்கு கொண்டுவர முடியும்.

தமிழக அரசின் மின் வாகனக் கொள்கையின்படி, 2030-க்குள் போக்குவரத்து சேவையில் மின்சார வாகனங்களின் பங்கை அதிகரிக்கும் இலக்கின் ஒரு பகுதியாக இந்தத் திட்டம் செயல்படும். சிறிய ரக மின் பேருந்துகளுக்கான வழித்தடங்கள், சேவை நேரம் மற்றும் இயக்கத் தொடக்க தேதி குறித்த அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் என்றனர்.

# சமூக நீதி முற்போக்கு கூட்டணி: பிரவீண் சக்கரவர்த்தி பதிவுக்கு இடதுசாரிகள் கண்டனம்

**சென்னை, ஜூன் 5:** தவெகவுக்கு ஆதரவு அளித்துள்ள கட்சிகளை 'தமிழ்நாடு சமூக நீதி முற்போக்கு கூட்டணி' என மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்குப் போட்டியிடும் பிரவீண் சக்கரவர்த்தி குறிப்பிட்டிருந்ததற்கு இடதுசாரிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

**பெ.சண்முகம் (மார்க்சிஸ்ட்):** புதிய கூட்டணியின் சார்பில் தான் மாநிலங்களவை வேட்பாளராக நிறுத்தப்பட்டு இருப்பதாகவும், அதில் மார்க்சிஸ்ட் இடம்பெற்றுள்ளதாகவும் பிரவீண் சக்கரவர்த்தி குறிப்பிட்டிருப்பது தவறானது. கூட்டணி அமைப்பது குறித்தோ, இந்த வேட்பாளருக்கு ஆதரவு கேட்டோ யாரும் எங்களை அணுகவோ, ஆலோசிக்கவோ இல்லை. தவெக ஆட்சி அமைக்க மார்க்சிஸ்ட் கட்சி எதன் அடிப்படையில் ஆதரவு தெரிவித்துள்ளோம் என்பது ஏற்கனவே தெளிவாக கூறப்பட்டுள்ளது.

**மு.வீரபாண்டியன் (இந்திய கம்யூனிஸ்ட்):** தமிழ்நாடு சமூக நீதி முற்போக்கு கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் இடம்பெற்றுள்ளதாக பிரவீண் சக்கரவர்த்தி கூறியிருப்பது தவறான ஒன்றாகும். இக்கூட்டணி குறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதுவும் தெரியாது. ஆளுநர் ஆட்சி அல்லது மறைமுகமான பாஜக ஆட்சி அமைந்துவிடக் கூடாது என்பதற்காகவே தவெக ஆட்சிக்கு ஆதரவு வழங்கப்பட்டுள்ளது. எவ்வித கூட்டணியிலும் நாங்கள் இடம்பெறவில்லை.


## டால்மியா பாரத் லிமிடெட்

பதிவு அலுவலகம்: டால்மியாபுரம், லால்குடி, மாவட்டம்-திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு - 621651.
பெருநிறுவன அலுவலகம்: 11ஆவது & 12ஆவது தளங்கள், ஹன்சாலயா கட்டடம், 15, பாரக்கம்பா சாலை, புது தில்லி-110001
தொலைபேசி எண்: 04329-235132, தொலைநகல்: 04329-235111, CIN: L14200TN2013PLC112346
மின்னஞ்சல்: corp.sec@dalmiabharat.com, இணையத்தளம்: www.dalmiabharat.com

**13ஆவது ஆண்டுப் பொதுக்குழுக் கூட்டம் தொடர்பான அறிவிப்பும் மின்னணு வாக்குப்பதிவு குறித்த தகவல்களும்**

இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், நமது நிறுவனத்தின் 13ஆவது ஆண்டுப் பொதுக் குழுக் கூட்டம் ("பொதுக்கூட்டம்") நிறுவனச் சட்டம் 2013-இன் உரிய நெறிமுறைகளுக்கு ஏற்பவும் அதன் கீழான விதிமுறைகளின்படியும் SEBI (கடமைகளைப் பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளியிடுதல்) ஒழுங்குமுறைகள் 2015 (இனி "பட்டியலிடுதல் ஒழுங்குமுறைகள்" எனக் குறிப்பிடப்படும்) அத்துடன் செப்டம்பர் 22, 2025 நாளிட்ட பொதுச் சுற்றறிக்கை எண் 03/2025 மற்றும் இது தொடர்பாகப் பெருநிறுவன விவகாரங்கள்துறை அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட முந்தைய சுற்றறிக்கைகள் (மொத்தமாக "அமைச்சகச் சுற்றறிக்கைகள்" எனக் குறிப்பிடப்படும்) ஆகியவற்றுக்கு இணங்கவும் 13ஆவது ஆண்டுப் பொதுக்கூட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளபடியும் வணிகத்தை நடைமுறைப்படுத்தும் பொருட்டு ஜூன் 30, 2026 - செவ்வாய்க்கிழமை அன்று இந்திய நேரப்படி முற்பகல் 11:30 மணிக்குப் பொது இடத்தில் உறுப்பினர்களை நேரிடையாக வரவழைக்காத வகையில் காணொளிக் கலந்துரையாடல் (VC) / இதர ஒளி-ஒலி ஊடக வாயிலாக (OAVM) நடைபெற உள்ளது. 13ஆவது ஆண்டுப் பொதுக்கூட்ட அறிவிப்பும் 2025-26 நிதியாண்டுக்கான நிறுவனத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட ஆண்டறிக்கையும் நிறுவனத்திடம் / முதலீட்டு முகமையிடம் (DP) / K-ஃபின் டெக்னாலஜிஸ் லிமிடெட்டிடம் [பதிவாளர் மற்றும் பங்குப் பரிமாற்ற முகமை ("RTA")] தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்து வைத்துள்ள நிறுவனத்தின் உறுப்பினர்கள் அனைவருக்கும் மின்னணு முறையில் அனுப்பப்பட்டுள்ளன.

மேலும், பட்டியலிடுதல் ஒழுங்குமுறைகள், பிரிவு 36(1)(b)-இன்படி, நிறுவனத்திடம் அல்லது RTA-இடம் அல்லது தங்கள் முதலீட்டு முகமையிடம் தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்து வைக்காத பங்குதாரர்கள் அனைவருக்கும் 13ஆவது ஆண்டுப் பொதுக்கூட்ட அறிவிப்பையும் 2025-26 நிதியாண்டுக்கான நிறுவனத்தின் ஆண்டறிக்கையையும் பதிவேற்றி வைத்துள்ள இணையமுகவரியின் விவரம் அடங்கிய கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

2025-26 நிதியாண்டுக்கான ஆண்டறிக்கையின் அச்சுப் பதிப்பானது குறிப்பாக அதைக் கேட்கும் உறுப்பினர்களுக்கு மட்டும் அனுப்பி வைக்கப்படும். நிறுவனத்தின் உறுப்பினர்கள் காணொளிக் கலந்துரையாடல் அல்லது இதர ஒளி-ஒலி ஊடக வாயிலாக மட்டுமே ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் இணையவும் கலந்து கொள்ளவும் முடியும்.

சட்டப் பிரிவு 108 அதனுடன் நிறுவன (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014-இன் விதி 20, பட்டியலிடுதல் ஒழுங்குமுறைகளின் கீழான ஒழுங்குமுறை 44, செயலகத் தரநிலை-2 ஆகியவற்றின்படி நிறுவனச் சட்டம் 2013, பிரிவு 108-இன் விதிமுறைகளுக்கு ஏற்பவும் அதன் கீழான விதிகளின்படியும் ஆண்டுப் பொதுக்கூட்ட அறிவிப்பில் முன்மொழியப்பட்டுள்ள அனைத்துத் தீர்மானங்கள் மீதும் மின்னணு முறையில் வாக்களிக்கும் வசதியைத் தனது RTA மூலம் நிறுவனம் வழங்குகிறது. இந்த வசதியின் விவரங்கள் பின்வருமாறு:

1. ஆண்டுப் பொதுக்கூட்ட அறிவிப்பும் 2025-26 நிதியாண்டுக்கான ஆண்டறிக்கையும் மின்னணு முறையில் அனுப்பி முடிக்கப்பட்ட நாள்: ஜூன் 4, 2026.
2. தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவு (Remote e-voting) தொடங்கும் நாள் மற்றும் நேரம்: ஜூன் 26, 2026 - வெள்ளிக்கிழமை அன்று காலை 9:00 மணி (இந்திய நேரப்படி).
3. தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவு முடிவடையும் நாள் மற்றும் நேரம்: ஜூன் 29, 2026 - திங்கட்கிழமை அன்று மாலை 5:00 மணி (இந்திய நேரப்படி).
4. வாக்களிக்கத் தகுதியான பங்குதாரர்களை இனங்காண்பதற்கான கெடுநாள்: ஜூன் 23, 2026 - செவ்வாய்க்கிழமை.
   ஆண்டுப் பொதுக்கூட்ட அறிவிப்பு அனுப்பி முடிக்கப்பட்ட பிறகு நிறுவனத்தின் பங்குதாரராகிக் கெடு நாள்படி - ஜூன் 23, 2026, செவ்வாய்க்கிழமை அன்று - பங்குதாரராக இருப்போர் evoting@nsdl.com அல்லது நிறுவனத்தின் corp.sec@dalmiabharat.com மின்னஞ்சல் முகவரிக்கு எழுதித் தங்களுக்கான பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் பெற்றுக் கொள்ளலாம். ஏற்கெனவே NSDL-இல் தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவுக்குப் பதிவு செய்திருப்பவர்கள் தங்களிடம் ஏற்கெனவே இருக்கும் பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் பயன்படுத்தியே வாக்கினைச் செலுத்தலாம்.
5. மின்னணு வழியிலான தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவு ஜூன் 29, 2026 - திங்கட்கிழமை அன்று மாலை 5:00 மணிக்குப் (இந்திய நேரப்படி) பின்னர் அனுமதிக்கப்படாது.
6. தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவு வசதியின் மூலம் தங்கள் வாக்கினைச் செலுத்திவிட்ட பங்குதாரர்கள் ஆண்டுப் பொதுக்கூட்டத்தின்பொழுது மீண்டும் வாக்களிக்க முடியாது. உறுப்பினர் பதிவேட்டிலோ முதலீட்டாளர்களால் வழங்கப்படும் ஆதாய உரிமையாளர்கள் பட்டியலிலோ குறிப்பிட்ட கெடு நாள்படி பதிவு செய்யப்பட்டுள்ள பங்குதாரர்கள் மட்டுமே தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவிலோ பொதுக்கூட்ட வாக்குப்பதிவிலோ வாக்களிக்க உரிமையுடையவர்கள் ஆவர்.
7. ஒருமுறை ஒரு தீர்மானத்தின் மீது வாக்களித்த பங்குதாரர் பின்னர் மீண்டும் வாக்களிக்கவோ அளித்த வாக்கினை மாற்றவோ முடியாது. தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவு மற்றும் ஆண்டுப் பொதுக்கூட்ட மின்னணு வாக்குப்பதிவு தொடர்பாகவும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வது பற்றியுமான விரிவான வழிகாட்டுதல்கள் ஆண்டுப் பொதுக்கூட்ட அறிவிப்பின் ஒரு பகுதியாகக் குறிப்புகள் பிரிவில் வழங்கப்பட்டுள்ளன.
8. தாளில்லா (demat) முறையில் பங்குகளை வைத்திருக்கிற, தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யாத பங்குதாரர்கள் தொடர்புடைய தங்கள் முதலீட்டு முகமையிடம் தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்து கொள்ளலாம். அச்சு வடிவில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள் K-ஃபின் டெக்னாலஜிஸ் லிமிடெட் எனும் நிறுவனத்தின் RTA-உடைய https://kprism.kfintech.com/signup எனும் இணைய முகவரி வாயிலாக அல்லது einward.ris@kfintech.com எனும் மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொண்டு தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டுகிறோம்.
9. தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவு நடைமுறைகள் அடங்கிய ஆண்டுப் பொதுக்கூட்ட அறிவிப்பானது நிறுவனத்தின் www.dalmiabharat.com இணையத்தளத்திலும் NSDL-இன் https://www.evoting.nsdl.com இணையத்தளத்திலும் கிடைக்கும்.
10. நிறுவனச் செயலராகச் செயல்படும் M/s.JVS அண்டு அசோசியேட்ஸ் நிறுவனத்தின் திருமதி ஜோதி ஷர்மா அவர்களைத் (உறுப்பினர் எண்: F8843, CP எண் 10196) தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவு மற்றும் ஆண்டுப் பொதுக்கூட்டத்தின் பொழுது நடைபெற உள்ள மின்னணு வாக்குப்பதிவு ஆகியவற்றுக்கான கூர்ந்தாய்வாளராக நிறுவனம் அமர்த்தியுள்ளது.

மின்னணு வாக்குப்பதிவு தொடர்பான மேலும் கேள்விகள் / தீர்வுகள் தொடர்பாக நீங்கள் www.evoting.nsdl.com இணையத்தளத்தில் உள்ள அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQ) பிரிவையும் அங்கு கிடைக்கக்கூடிய பங்குதாரர்களுக்கான மின்னணு வாக்குப்பதிவுப் பயனர் கையேட்டையும் பார்வையிடலாம். அல்லது தொடர்பு கொள்க: NSDL, தொ.பே.எண்: 022-48867000 அல்லது கீழே கையொப்பமிட்டுள்ளவரைத் தொடர்பு கொள்ள: 11ஆவது தளம், ஹன்சாலயா கட்டடம், 15, பாரக்கம்பா சாலை, புது தில்லி - 110001, தொ.பே.எண்: 011-23465100; மின்னஞ்சல் முகவரி: corp.sec@dalmiabharat.com.

வாரியத்தின் உத்தரவுப்படி,
டால்மியா பாரத் லிமிடெட் சார்பில்
ஒம்/-
ராஜீவ் குமார்
நிறுவனச் செயலர்
உறுப்பினர் எண்: F-5297

இடம்: புது தில்லி
நாள்: ஜூன் 5, 2026

